


Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

07.05.2020 வியாழக்கிழமை


## கொரோனாவின் பிடியிலிருந்து இதுவரை 232 பேர் மீண்டார்கள்!

*556 பேர் சிகிச்சையில்*

*கொழும்பு, மே 7*
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 17 பேர் குணமடைந்துள்ளனர். இதையடுத்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 232 ஆக அதிகரித் 2

## மே 11 தொடக்கம் வடக்கு அலுவலகப் பணிகள் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், மே 7*
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அலுவலகங்களினதும் பணிகள் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் முழுமையாக ஆரம்பமா 2

## பத்தாவது நோயாளியும் யாழில் குணமடைந்தார்

*யாழ்ப்பாணம், மே 7*
கொரோனா தொற்றுக்கு இலக்கான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 10ஆவது நோயாளி இன்று மாலை வீடு திரும்பினார். இரணவில மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நோயாளர் காவு வண்டியில் அவர் அழைத்து வரப்பட்டார். அரியாலையில் 2

## ஆனல்ட்டுக்கு வெள்ளையடிப்பு

*யாழ்ப்பாணம், மே 7*
அரசின் அபிவிருத்தித் திட்டங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் ஒளிப்படங்களை அகற்றும் மறைக்கும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணத் தேர்தல்கள் திணைக்களத்தினால் இது தொடர்பான அறிவித்தல் நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் இன்றைய தினம் சில இடங்களில் வேட்பாளர்களின் படங்களுக்கு வெள்ளையடிப்புச் செய்து மறைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கட்டடம் அமைப்பதற்காக 2

# கூட்டமைப்பின் நேசக்கரம் எமக்கு இப்போது பலம்!

### தமிழரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அரசு உறுதி என்கிறார் மஹிந்த



கொழும்பு, மே 7
எதிர்க்கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அலரிமாளிகைக் கூட்டத்தைப் புறக்கணிக்கக்கூடும் என்றே நாம் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தமிழ் மக்களின் நன்மை கருதி, நாட்டின் நலன் கருதி சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். அதுமட்டுமன்றி நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் அவர்கள் உறுதியளித்தனர். இது எமக்குப் பலமாக அமையும். 2



## மனித உரிமை ஆர்வலரின் நாய் சுட்டுக் கொலை

*கொழும்பு, மே7*
நீர்கொழும்பு பெரியமுல்லை, புனித அந்தோனியார் வீதியில் வீடொன்றில் வளர்க்கப்படும் செல்லப் பிராணியான நாயொன்று இன்று காலை ஆறு மணியளவில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது. பிரபல மனித உரிமை செயற்பாட்டாளரும், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப 2



## 367 கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று

*கொழும்பு, மே 7*
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 367 கடற்படையினர் இது வரை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்துள்ளனர். அவர்களில் மேலும் 8 பேர் சிகிச்சையின் பின்னர் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 8 கடற்படையினரில் 7 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையிலும், மற்றையவர் முல்லேரியா 2

## சுற்றுலாப் பயணிகளை அழைத்துவரத் திட்டம்

### பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இப்படி யோசனை முன்வைக்கிறது அரசு

*கொழும்பு, மே 7*
கொரோனாவை ஒழித்து எழுந்துள்ள நாடுகளை இலக்காகக் கொண்டு சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர முடியும். கொரோனா ஒழிப்புக்கு இலங்கை மேற்கொண்ட முறையான நடவடிக்கைகளை ஏனைய நாடுகளுக்கு எடுத்துக்கூறி சுதேச மற்றும் மேலைத்தேய சிகிச்சைக்காக சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்க முடியும். சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதாரச் சான்றிதழுடன் விசாக்களை வழங்கி அதிகம் செலவிடக்கூடிய இயலுமையுள்ள சுற்றுலாப் 2



## விஷவாயுக் கசிவால் 13 பேர் பரிதாபச்சாவு

### இந்தியாவில் துயரம்

*புதுடெல்லி, மே 7*
இந்தியாவின் விசாகப்பட்டினம் மாநிலத்தில் உள்ள இரசாயன ஆலையொன்றில் ஏற்பட்ட விஷ வாயுக் கசிவால் 13 பேர் பரிதாபமாக உயிரிழந் 2

## மணல் அகழ்வு உரிமத்தில் ஜூன் 1 வரை தளர்வு

*கொழும்பு, மே 7*
மணல் உள்ளிட்ட கனிய வளங்களை அகழ்வதற்கு வழங்கப்படும் உரிமத்தில் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது. இந்தப் புதிய தளர்வு வரும் மே 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்று 2

## கொரோனாவின் பிடியிலிருந்து...

துள்ளது. நோயாளிகளில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 556 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு மருத்துவமனையில் 127 பேரும், வெலிகந்தை ஆதார மருத்துவமனையில் 52 பேரும், முல்லேரியா ஆதார மருத்துவமனையில் 86 பேரும், இரணவில மருத்துவ மனையில் 18 பேரும், காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் 59 பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை மருத்துவமனையில் 154 பேரும், ஹோமாகம ஆதார மருத்துவ மனையில் 60 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மேலும் 134 பேர் மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ,5,22)

## பத்தாவது....

ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 20 பேர் கே.கே.எஸ். தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
இதனையடுத்து கொழும்பு தொற்று நோய் மருத்துவமனை, வெலிகந்தை மருத்துவமனை, இரணவில மருத்துவ மனை ஆகியவற்றுக்கு அவர்கள் அனுப்பப்பட்டனர். ஏற்கனவே 9 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த நிலையில் பத்தாவது நோயாளியும் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஒ,5)

# கூட்டமைப்பின்...

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த திங்கட்கிழமை அலரிமாளிகைக் கூட்டத்திலும் அன்றைய தினம் மாலை எனது வீட்டில் நடைபெற்ற சந்திப்பிலும் கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கைகளை நாம் பரிசீலித்து வருகின்றோம். அந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை தமிழ் மக்கள் சார்பாகவே இருக்கின்றன. எனவே, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வு காணவேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. எனது அழைப்புக் கிணங்க கூட்டமைப்பினர் என்னை வந்து சந்தித்தமை தொடர்பில் எதி ரணியிலுள்ள சிலர் விசமத்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.
இதிலிருந்து அவர்கள் அரசியல் இலாபம் தேடுகின்றனர் என்பது வெளிப்படையாகப் புலனாகின்றது.
எனவே, அப்படிப்பட்டவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் உரிய பதிலை வழங்க வேண்டும் - என்றார். (ஒ,5,22)

## மே 11 தொடக்கம்.....

கும் என்று வடக்கு மாகாண பிரதம செயலர் அ. பத்திநாதன் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் ஆளுநரின் செயலர், அமைச்சுச் செயலர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜனாதிபதி செயலணியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், பிராந்திய அலுவலகங்கள் உள்பட அனைத்து அரச அலுவலகங்களையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் அலகுகள் யாவும் தமது வழமையான நாளாந்த செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அலுவலகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது ஜனாதிபதியின் செயலரால் கடந்த மாதம் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் சுகாதார அமைச்சால் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்று மாறு பணிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)

## மனித உரிமை.....

அங்கத்தவர் ஒன்றியத்தின் தலைவருமான பிரிட்டோ பெர்னாந்துவின் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் 'மெக்ஸ்' என்று அழைக்கப்படும் நாயே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பாக பிரிட்டோ பெர்னாந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததாவது: எனது வீட்டில் இரண்டு நாய்கள் வளர்க்கப்படுகின்றன. அதில் மெக்ஸ் என்று செல்லப் பெயரில் அழைக்கப்படும் நாயை அதன் இயற்கை கடன்களை நிறைவேற்றுவதற்காக காலை ஆறு மணியளவில் வெளியில் செல்ல அனுமதித்தேன்.
ஐந்து நிமிட நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் ஒன்று கேட்டது. நான் வீதிக்கு வந்து பார்த்தபோது, எனது நாய் குருதிக் காயங்களுடன் தட்டுத்தடுமாறியவாறு வருவதை அவதானித்தேன். எனது வீட்டின் முன்பாக வீதியில் விழுந்து பின்னர் அது இறந்து போனது.
எமது வீட்டுக்கருகில் உள்ள ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரையே நான் இது தொடர்பாக சந்தேகிக்கின்றேன். அவரது வீட்டின் முன்பாகவே நாய் துப்பாக்கியால் சுடப்பட்டதற்கான தடயங்கள் உள்ளன. உடனடியாக இது தொடர்பாக 119 பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அறிவித்தேன். இந்த வீதியில் யாரிடம் துப்பாக்கி உள்ளதென்பதை ஆராய வேண்டும் என்று தெரிவித்தார். சம்பவத்தை அடுத்து நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதயகுமார வுட்லர் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர். பிரிட்டோ பெர்னாந்து சந்தேகிக்கும் பொலிஸ் அதிகாரியின்வீட்டுக்கு முன்பாக உள்ள வீடொன்றின் மதில், துப்பாக்கி சன்னம்பட்டு சேதமடைந்துள்ளதை காணமுடிந்தது. சம்பவம் இடம் பெற்ற இடத்தில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி காட்சி களையும் ஆராய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஒ,5)

## ஆனல்ட்டுக்கு....

அடிக்கல் நடுகை செய்யப்பட்டபோது திறந்து வைக்கப்பட்ட கட்டவுட்டில், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனல்டின் படம் காணப்பட்டது. ஆனல்ட் வேட்பாளராகப் போட்டியிடுகின்றமையால் கட்டவுட்டில் அவரது படத்துக்கு வெள்ளையடிக்கப் பட்டுள்ளது.
அதேபோன்று தென்னிலங்கையில் அமைச்சர்களாக இருந்து தற்போதைய தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் படங்களும் வெள்ளையடிப்புச் செய்து மறைக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

## 367 கடற்படையினருக்கு

மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.
இவர்கள் மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியபோதிலும், சுகாதார ஆலோசனைக்கு அமைய இவர்களை மேலும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இவர்களுடன் சேர்த்து 12 கடற்படையினர் கொரோனா தொற்றிலிருந்து இதுவரை குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

## மணல் அகழ்வு உரிமத்தில்...

அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.
கனியவளத்தை அகழ்வதற்கான இடம் மட்டுமே சேர்க்கப்படும். வாகனத்தின் இலக்கம் உரிமத்தில் சேர்க்கப்படாது. மணல் போக்குவரத்து அனுமதியில் பொலிஸ் பிரிவுகள் சேர்க்கப்படாது. எந்த நேரத்திலும் கனிமங்களைக் கொண்டு செல்ல அனுமதியளிக்கப்படும். தளர்வளிக்கப்பட்ட போக்குவரத்து அனுமதிகளுக்கு ஜூன் முதலாம் திகதி தொடக்கம் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் பணித்துள்ளது. (ஒ,5)

## சுற்றுலாப் பயணிகளை....

பயணிகளை அழைத்துவர திட்டமிட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
மே 11 முதல் மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வரப்படும் இயல்பு வாழ்க்கையுடன் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பும் நோக்குடன் ஜனாதிபதி செயலணியுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்ற முதலாவது கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
புதிய பொருளாதார மாதிரியொன்றை தயாரிக்கும் பொறுப்பு பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது. செயலணி விடயத் துறைகளுக்கு ஏற்ப பகுதியாக பிரிந்து இலக்குமயப்பட்ட புதிய பொருளாதார திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.
நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக உள்ள ஆடை மற்றும் சுற்றுலா கைத்தொழிலை புதிய வடிவில் ஆரம்பிக்க வேண்டும். சில நாடுகளில் சுற்றுலாப் பயணிகள் குளிர் காலத்தில் நீண்ட காலத்துக்கு வேறு நாடுகளுக்கு செல்கின்றனர்.
அத்தகைய சுற்றுலா பயணிகளை இலக்காகக் கொண்டு நீண்ட கால சுற்றுலாப் பயணிகளை அழைத்து வந்து சுற்றுலா கைத்தொழிலை விரைவாகக் கட்டியெழுப்பமுடியும்.
சுதேச சுற்றுலா வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கு அதிக கவனம் செலுத்தி ஹோட்டல் கைத்தொழிலை பாதுகாக்க கூடிய வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் ஆகியவற்றை மையப்படுத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டுவருவதற்குள்ள வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.
வெளிநாட்டு கடனுக்குப் பதிலாக முதலீட்டு வாய்ப்புகளுக்கு திட்டமிடும் பொறுப்பு அமைச்சுக்களின் செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
கடந்த சில வாரங்களாக பல புதிய ஆக்கங்கள் நாட்டில் உருவாகியுள்ளன. அவற்றை உலக சந்தைக்கு அறிமுகப்படுத்தி புதிய உற்பத்திகளை ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஒ,5)

## விஷவாயுக் கசிவால்...

தனர்.
ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே உள்ள ஆர்.ஆர்.வெங்கடபுரம் கிராமத்தில் எல்.ஜி பாலிமர்ஸ் என்ற இரசாயனத் தொழிற்சாலை உள்ளது. இந்த ஆலையில் இருந்து இன்று அதிகாலையில் இரசாயன வாயு கசிந்து வெளியேறியது.
அதிக அழுத்தத்துடன் வெளியேறிய வாயு, ஆலைக்கு வெளியே பல மீற்றர் தொலைவுக்குப் பரவியது. காற்றில் கலந்த விஷவாயுவால் மூச்சுவிட முடியாமல் மக்கள் தவித்தனர். பலருக்கு கண் எரிச்சல், மூச்சுத்திணறல் ஏற்பட்டது. பலர் மயங்கி விழுந்தனர்.
இந்த விஷவாயுத் தாக்குதலால் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. சுமார் ஆயிரம் பேர் வரையிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

# சுகாதார விதிகளை மீறின் நடவடிக்கை!

சாவகச்சேரி, மே. 7

தென்மராட்சியில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக சிகை அலங்கரிப்பு நிலையங்கள் செயற்படுவது அவதானிக்கப்பட்டால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் எச்சரித்துள்ளனர்.

சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகுக்கலை நிலையங்கள் என்பவற்றைத் திறக்க சுகாதார அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டதையடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தில் சில சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. இதையடுத்தே மேற்படி திணைக்களத்தினரால் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# சிகை அலங்கரிப்புக்கு மாத்திரமே அனுமதி!

## முகச்சவரம் செய்யப்படமாட்டாது என கிளிநொச்சி அழகக சங்கம் அறிவிப்பு

கிளிநொச்சி, மே 7

சுகாதார முறைப்படி சிகை அலங்கரிப்பு வேலைகளை மாத்திரம் முன்னெடுக்க உள்ளோம். முகச்சவரம் செய்வதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தின் செயலாளர் தர்மராசா யுகேசன் தெரிவித்ததாவது:

முறையான சுகாதார முறைப்படி சிகை அலங்கார வேலைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட உள்ளன. அதற்கு அமைவாக சிகை அலங்கார வேலைக்கு வருகைதரும் வாடிக்கையாளர்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். அதேவேளை வருகைதரும் வாடிக்கையாளர்கள் சுகாதாரத்தைப் பிற்பற்றும் வகையிலும் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலும் போர்வை மற்றும் துணிகளைக் கொண்டுவர வேண்டும். தற்போது சிகை அலங்கரிப்புக்கு மாத்திரமே அனுமதி வழங்கியுள்ளோம். முகச் சவரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை - என்றார். (ம)

# சலவைத் தொழிலாளர்களுக்கு கொரோனாவால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 7

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக தொழிலை இழந்து பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சலவைத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த இரண்டு மாதகாலமாக நாளாந்த வருமானம் இன்றி மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம், அனைத்து தொழிலாளர்களுக்கும் பல்வேறு விதத்தில் உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. எனினும் எமக்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை.

சலவைத் தேவைக்காக மக்கள் வருவது முற்றாகத் தடைப்பட்டுள்ளது. அந்தத் தொழிலை வாழ்வாதாரமாக செய்துவரும் நாமும் இதனால் மிகவும் கஸ்டப்படுகிறோம். எமக்கும் உதவிகள் கிடைக்க சம்மந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் - என்றனர். (ஐ-113)



பழனியானந்தன் சனசமூக நிலையத்தால் மறைந்த ஆ.துரைராஜசிங்கத்தின் ஞாபகார்த்தமாக குருதிக்கொடை முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமில் 43 குருதிக் கொடையாளர்கள் குருதிக்கொடை வழங்கினர். (ஐ-222)

# கசிப்பு உற்பத்தி; இருவர் கைது



முல்லைத்தீவு, மே 7

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் ஆற்றுப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதி நேற்று முற்றுகையிடப்பட்டது. இதன்போது 72 மற்றும் 70 வயதுடைய முதியவர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 549 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருள்கள் என்பன மீட்கப்பட்டன.

சந்தேகநபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)




# கிளிநொச்சியில் பருப்பு, ரின்மீன் தொடர்ந்தும் மானிய விலையில்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 7

பருப்பு, ரின்மீன்களுக்கு மானிய விலை நீக்கப்பட்டுள்ள நிலையிலும் கிளிநொச்சி மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்க முடியும் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணவு ஆணையாளரிடமிருந்து தலா 25ஆயிரம் கிலோ சீனி, பருப்பு, ரின் மீன், 2500 கிலோ வெள்ளைப்பூடு ஆகியவை பெறப்பட்டு அவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக மக்களுக்கு நியாய விலையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து இரண்டாவது தடவையாக உணவு ஆணையாளரிடமிருந்து குறித்த பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக பருப்பு 4ஆயிரத்து 500 கிலோ, சீனி 10 ஆயிரம் கிலோ, 20 ஆயிரம் ரின் மீன்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பருப்பு மற்றும் ரின் மீன்களுக்கான மானிய விலை அரசால் தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் குறித்த பொருள்கள் மானிய விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைவாகப் போக்குவரத்துச் செலவுகளுடன் அவற்றைத் தொடர்ச்சியாகக் கிளிநொச்சி மக்களுக்கு மானிய விலையிலேயே கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்றார். (ஐ-6)

# முகக் கவசங்கள் கையளிப்பு!

முல்லைத்தீவு, மே 7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் மருத்துவமனைகளுக்கு கட்டம் கட்டமாக முகக் கவசங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதன் இரண்டாம் கட்டமாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு ஒரு தொகுதி முகக்கவசங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-222)



# தனிப்பட்ட அரசியல் நோக்குடன் செயற்படுவது அநாகரிகமானது

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

நாடு நெருக்கடியான நிலையை எதிர்கொண்டிருக்கையில் சுய அரசியல் நோக்குடன் செயற்படுவது அநாகரிகமானதாகும். ஆளும் கட்சியாக பதவியிலிருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;



மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை தெரியப்படுத்த வேண்டியது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்டாய கடமையாகும்.

எதிர்க்கட்சியாக இருக்கும் போது எடுத்துக்காட்டாக செயற்படுவதன் மூலம் ஆட்சி அதிகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் செயற்படும் விதம் பற்றி மக்களுக்கு புரிதலை ஏற்படுத்துவதாகவே அமையும். கொவிட்19 தொற்றினால் நாடு பாரியதொரு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. ஏனைய உலக நாடுகளும் இன்று முழுமையாக செயலிழந்து நாட்டு மக்களின் நலன் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தி செயற்படுகின்றன. இதே நிலையில் தான் நாமும் எமது மக்களின் நலன் குறித்து கூடிய கவனம் எடுக்க வேண்டும். அரசாங்கம் பொறுப்பற்று செயற்படும் பட்சத்தில் அதனைக் கடுமையாக விமர்சிக்க வேண்டும். மறுபுறம் நல்ல விடயங்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். எனவே தற்போதைய நிலைமையில் நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார். (ப)

# குடியிருப்புக்குள் வந்த யானை விரட்டப்பட்டது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, மே 7

குடியிருப்புக்குள் நுழைந்த யானையால் பொதுமக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவம், இன்று காலை வவுனியா கனகராயன்குளம் பெரியகுளம் பகுதியில் இடம்பெற்றது.

விவசாயக் காணி ஒன்றில் அச்சுறுத்தும் வகையில் நின்ற யானையை அவதானித்த விவசாயி ஒருவர் அது தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கினர்.

வெடிகள் மற்றும் துப்பாக்கிகளுடன் அங்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அந்த யானையை அப்பகுதியில் இருந்து காட்டுப் பகுதிக்குள் விரட்டினர். அந்தப் பகுதியில் யானைகளின் அட்டகாசம் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில் விவசாய உற்பத்திகள் அழிவடைந்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ப-110)



# வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் அளவெட்டி மலைவேம்படி வீதி, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சீரமைப்பு செய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. அந்த வீதி நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் இருந்ததால் , மக்கள் மிகவும் சிரமத்துடன் பயணிக்க வேண்டிய நிலையில் இருந்தார்கள் என்றும், தற்போது குறித்த வீதி சீரமைக்கப்பட்டு பாவனைக்காக விடுவிக்கப்பட்டதால் மக்கள் சிரமமின்றிப் பயணிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-63)

# 41,593 குடும்பங்களுக்கு வவுனியாவில் ரூபா 5,000

யாழ்ப்பாணம், மே 7

வவுனியா மாவட்டத்தில் வாழும் 55 ஆயிரத்து 439 குடும்பங்களில் 41 ஆயிரத்து 593 குடும்பங்களுக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா மாவட்டத்தில் 55 ஆயிரத்து 439 குடும்பங்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறு வாழும் குடும்பங்களில் அரச உத்தியோகம் செய்யும் குடும்பங்கள் மற்றும் 2 ஆயிரத்து 631 ஓய்வூதியம் பெறும் குடும்பங்கள் தவிர்ந்து எஞ்சிய குடும்பங்களில் இருந்து வறுமைக்குள்ளான வர்களுக்கு இந்த 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அதில் 21 ஆயிரத்து 755 சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கும், சிறுநீரகப் பாதிப்பாளர்கள் 2 ஆயிரத்து 746 குடும்பங்களுக்கும், விசேட தேவை உடைய 2 ஆயிரத்து 590 குடும்பங்களுக்குமென மொத்தமாக 41 ஆயிரத்து 589 குடும்பங் களுக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-105)



# போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது

வாழைச்சேனை, மே 7

வாழைச்சேனை பிரதேசத்தில் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து, 100 போதை மாத்திரைகளையும் கைப்பற்றினர். சந்தேகநபர்களை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இவர்கள் போதை மாத்திரை வியாபாரம் செய்வதாக ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-150)



# 5,000 ரூபா கொடுப்பனவை வழங்கக் கோரி கவனவீர்ப்பு

பத்தனை, மே 7

பத்தனை, கிறேகிலி தோட்டத்தில் வாழும் மக்கள் தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று மதியம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தமக்கு வழங்கப்படவில்லை என்றும், பக்கச்சார்பான முறையிலேயே பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட, நாளாந்த வருமானத்தை இழந்தவர்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இந்த நிலையில் இந்த 5,000 ரூபா கொடுப்பனவில் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். தோட்டத்தில் உரிய வகையில் வேலை வழங்கப்படுவதில்லை. 18 கிலோ கொழுந்து பறிக்கா விட்டால் அரைநாள் சம்பளமே போடப்படுகின்றது.

750 ரூபா சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையை முன்னெடுக்க முடியாது. எனவே 5,000 ரூபா வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)



# குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள்

## வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

வவுனியா, மே 7

கடந்த இரு மாதங்களில் வவுனியாவில் பெரியளவிலான குற்றச் செயல்கள் எவையும் இடம்பெறவில்லை என்று வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

கொரோனா தாக்கம் தொடர்பில் வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த பொலிஸார் சுகாதாரத் துறையினர், படைத்தரப்பு மற்றும் மாவட்டச் செயலகத்துடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். கிருமித் தொற்று நீக்கி விசிறல், கொரோனாத் தொற்று சந்தேக நபர்களை அடையாளம் காணல், ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், ஊரடங்கு தளர்வின் போது நகரில் சுகாதார நடைமுறைகளைக் கவனித்தல், பாஸ் அனுமதி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு வேலைகளைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கான விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டு அர்ப்பணிபுடன் மக்களதும், அரச அதிகாரிகளினதும் பங்களிப்புடன் கடமைகளைச் செய்கின்றனர்.

கொரோனா தொடர்பில் பொலிஸார் இரண்டு வகையான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மக்களைப் பாதுகாத்தல் மற்றும் தம்மைப் பாதுகாத்தல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே கடமையாற்றுகிறார்கள். கொரோனாத் தொற்றுக் காரணமாக நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்டக் காலப்பகுதியில் வவுனியாவில் குற்றச் செயல்கள் எவையும் பெரியளவில் இடம்பெறவில்லை.

மதுபானசாலைகள் பூட்டப்பட்டமையால் சில இடங்களில் இடம்பெற்ற கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் பொது மக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மக்களும் பொலிஸாருக்கு உதவி வருகின்றனர்- என்றார். (ப-18)



## வாழ்வோம் வளம் பெறுவோம்: 18 பயனாளிகளுக்கு உதவிகள்

முல்லைத்தீவு, மே 7

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரனால், முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தின் 33ஆம் கட்டத்தின் பகுதி பன்னிரண்டு செயற்றிட்டம் அவரது மக்கள் தொடர்பகத்தில் நேற்று இடம்பெற்றது.

செயற்றிட்டத்தில் 18 வறிய பயனாளிகள் உள்ளீர்க்கப்பட்டு, அவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் வாழ்கின்ற திருவிணையர் ஜெயந்தன் ஜெயப்பிரியா ஆகியோரின் மகன் சங்கீத்தனின் ஏழாவது பிறந்த நாளில், அவர்களால் இச் செயற்றிட்டத்திற்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டது என்று ரவிகரன் தெரிவித்தார். (ப)

# பொதுமன்னிப்பில் கைதிகள் விடுதலை

## யாழில் 4 பேர் வீடு சென்றனர்

யாழ்ப்பாணம், மே 7

வெசாக் பௌர்ணமி பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் 228 கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் நான்கு கைதிகள் வீடுகளுக்குச் சென்றனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுக்கு நீதிமன்றினால் தண்டப்பணம் விதித்து அதனைச் செலுத்த முடியாது தண்டனை அனுபவித்த 5 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு மற்றொரு வழக்கில் தண்டனைக் காலம் நிறைவடையாததால் அந்தக் கைதி மீளவும் சிறையில் அடைக்கப்பட்டார். தண்டனைச் சட்டத்தின் பிரிவு 31இன் கீழ் பெருங்குற்றங்களில் ஈடுபடாத கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது. அதன்படி, சிறு குற்றங்களில் தண்டனை பெற்ற நபர்களுக்கும், 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கும், தண்டம் செலுத்த முடியாத கைதிகளுக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவார். இன்று விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதன் காரணமாக சிறைச்சாலை வாகனத்தில் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ப)

### கிளிநொச்சியில்

# காற்றுடன் கடும் மழை வியாபாரிகள் பாதிப்பு

கிளிநொச்சி, மே 7

நீண்ட நாள்களின் பின் காற்றுடன் கூடிய மழை கிளிநொச்சியில் கொட்டித் தீர்த்தது. இதனால் மரக்கறி வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று மாலை காற்றுடன் கூடிய இடி மின்னலுடனான மழை பெய்தது. எதிர்பாராத இந்த மழையால் கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகளின் பெருமளவு மரக்கறிகள் மழையில் நனைந்தன.

கொரோனா பாதுகாப்புக் கருதி சமூக இடைவெளியைப் பேணும் வகையில் சந்தையின் வெளிப்புறத்தில் தகரப் பந்தல்கள் அமைத்து வியாபாரிகள் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். திடீரென பெய்த கடும் மழை காரணமாக விற்பனை பகுதிக்குள் வெள்ளநீர் புகுந்தது. மழையோடு கடும் காற்றும் வீசியதால் தகரக் கொட்டகைகள் பிடுங்கி வீசப்பட்டன. குறுகிய நேரத்தில் கடும்மழை பெய்ததால், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கொட்டகைகளுக்குள் வெள்ளம் புகுந்தது இதனால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர். (ப-214)





# சிங்கப்பூரிலிருந்தும் 186 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 7

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சிங்கப்பூரில் சிக்கித் தவித்த 186 பேர் கொண்ட இலங்கை மாணவர்கள் குழுவொன்று நேற்று நாடு திரும்பியது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் 302 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாகவே இவர்கள் நேற்று மாலை 4.45 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலைய அதிகாரியொருவர் உறுதிப்படுத்தினார்.

சிங்கப்பூரில் சிக்கித் தவித்த இந்த மாணவர்கள் குழுவை அழைத்து வருவதற்காக குறித்த விமானமானது நேற்று காலை 7.30 மணியளவில் பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டிருந்தது. விமானத்திலிருந்து தரையிறங்கிய மாணவர்களை இலங்கை விமானப் படையினரும் சுகாதார அதிகாரிகளும், கிருமி நீக்கத்துக்கு உட்படுத்தியதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இராணுவ பஸ்கள் மூலமாகவும் அனுப்பி வைத்தனர். (ப)



## வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களின்

# தனிமைப்படுத்தல்களுக்கு பல்கலைக்கழக விடுதிகள்

கொழும்பு, மே 7

வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படும் மாணவர்களை தனிமைப்படுத்துவதற்காக பல்கலைக்கழக விடுதிகளைப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் பல்கலைக்கழக அதிகாரிகளும் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தொடர்பாக யோசனைகளை முன்வைத்தார். இதன்படி தற்போது வெளிநாடுகளுக்கு சென்றிருந்த மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சார்க் நாடுகளில் கற்கும் மாணவர்களும் பின்னர் மற்றைய நாடுகளில் கல்வி மற்றும் பட்டப் படிப்பிற்காக சென்றுள்ளவர்களை அழைத்துவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் நாடு திரும்பியதும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர். இதன்படி பலர் கட்டணம் செலுத்தி தமது சுய விருப்பில் ஹோட்டல் அறைகளில் தனிமைப்படுத்தலில் ஈடுபடுகின்றனர். ஆனால் எல்லா மாணவர்களுக்கும் பணம் செலுத்தி ஹோட்டல் அறைகளில் தங்க முடியாது. இதனால் பணம் செலுத்த முடியாதவர்களுக்காக பல்கலைக்கழக விடுதிகளின் இடத்தை வழங்குவதற்கு மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை அடுத்த கட்டமாக தொழிலுக்காகச் சென்றுள்ள இலங்கையர்களை அழைத்துவரும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். குறிப்பாக மாலைதீவு, டுபாய், குவைத் உள்ளிட்ட நாடுகளிலிருந்து அழைத்துவருவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்- என்றார். (ப)

## வீடுகளின் வாடகை விடயத்தில்

# மனிதாபிமானத்துடன் நடவுங்கள்

### அரசு வேண்டுகோள்

கொழும்பு, மே 7

கொழும்பு உள்ளிட்ட நகர்ப் பகுதிகளில் வாடகை வீடுகள், அறை களில் தங்கியிருப்போரின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களின் மாத வாடகையை அறவிடும் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் நடந்துகொள்ளுமாறு அரசாங்கம் வீட்டு உரிமையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. அத்துடன் இக்கால கட்டத்தில் மாத வாடகைகளை அறவிடுவதைத் தவிர்க்குமாறும் அல்லது வாடகையில் ஒரு பகுதியை மாத்திரம் அறிவிடுமாறும் அரசாங்கம் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சரவையில் மக்களுக்கு விசேட கோரிக்கையொன்றை விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதாவது கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் பல்கலைக்கழகங்கள் செல்வோர் மற்றும் தொழிலுக்கு செல்வோர் அதிகமாக வாடகை அறைகளிலேயே தங்கியிருக்கின்றனர். தற்போதைய நிலைமையில் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் அறை மற்றும் வீட்டு உரிமையாளர்கள் மாத வாடகைப் பணம் கேட்கலாம். ஆனால் இது அவர்களின் வருமானம் என்றாலும் தற்போதைய நிலைமையில் இந்த விடயத்தில் அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் நடக்க வேண்டும். சில இடங்களில் அதில் இருந்தவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றிருந்தால் அந்த அறைகளில் இல்லாத நிலையிலும் வாடகை கேட்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இதில் மானிதாபினமான அடிப்படையில் வாடகையில் ஒரு பகுதியை மாத்திரம் அறவிடுமாறும் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது- என்றார். (ப)

## உடையார்கட்டு குள நீர் வீண்விரயமாகவில்லை

### அதிகாரிகள் தகவல்

முல்லைத்தீவு, மே 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டுகுளத்தின் நீர் விரயமாக்கப்படுவதாக கடந்த வாரம் விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என்று செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தச் செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்று முல்லைத்தீவு, அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நீர்பாசன திணைக்களங்களுக்கு சொந்தமான குளங்களில் போதியளவு நீர் உள்ளன முத்துஐயன்கட்டு குளம் திறந்துவிடப்பட்டுள்ளது. அதேபோன்று உடையார்கட்டு குளமும் விவசாயச் செய்கைக்காக நீர் திறந்து விடப்பட்டுள்ளன. உடையார் கட்டுகுளத்தின் நீர் கொள்ளவுக்கு ஏற்ப கட்டு திறக்கப்பட்டுள்ளது. சுமார் 7.5 கிலோமீற்றர் தூரத்துக்கு குளத்து நீரை வாய்க்கால் வழியாக கொண்டு செல்ல வேண்டும். அதற்காக குளத்துக்கு அருகில் உள்ள வாய்காலில் அதிகளவான நீர் பாய்ந்தால்தான் 7.5 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள விவசாய நிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்லமுடியும் என்று இது தொடர்பில் நீர்பாசன திணைக்கள பொறியியலாளர்கள், பணிப்பாளர்கள் தெரிவித்தனர். (ப-19)



## கொரோனாவை விரட்ட எப்படிக் கை கழுவுவது?

### சுகாதார மேம்பாட்டு பணியகம் விளக்கம்

கொடிகாமம், மே 7

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றியிருந்து பாதுகாக்கும் வகையில் எவ்வாறு கை கழுவ வேண்டும் என்பது தொடர்பான கைகழுவும் வழி முறைகளை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அறிவித்துள்ளதாவது;

முதலில் உங்கள் கைகளை நீரில் நனைக்கவும், உங்கள் கைகள் முழுவதிலும் படும்படியாக போதியளவு சவர்க்காரம் இடுங்கள், உள்ளங்கை இரண்டையும் ஒன்றோடொன்று தேய்த்து கழுவுங்கள், ஒரு கையின் உள்ளங்கையினை மறுகையின் பின்புறம் வைத்து தேய்த்து கழுவுங்கள்

விரல்களுக்கு இடையில் தேயுங்கள், விரல்களின் பின்புறத்தை மற்றைய கையின் உள்ளங்கையில் தேயுங்கள் (ஒரு கையின் விரல்கள் மறுபுறத்தின் விரல்கள் வழியாக செல்லும் வகையில்) வலது கையை இடது கைப் பெருவிரலைச் சுழற்சி முறையில் சுத்தப்படுத்துங்கள் எல்லாச் சவர்க்காரமும் அகற்றப்படும் வரை உங்கள் கைகளை நன்றாகக் கழுவுங்கள். உங்கள் கைகளை முற்றாக உலர்த்துங்கள், குழாயை மூடுவதற்கு துடைக்கும் துணியைப் பயன்படுத்துங்கள் என்றுள்ளது. (ஐ-159)

## கொவிட் 19 நிதியத்தின் வைப்பு

# மீதி 891 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, மே 7

கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 891 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

செலான் வங்கி 2.5 மில்லியன் ரூபாவையும், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி 05 மில்லியன் ரூபாவையும், கே.டீ.யு. குணரத்ன ஒரு மில்லியன் ரூபாவையும் மற்றும் திரு. ஏ.பி.பீ சேனகம இரண்டு லட்சம் ரூபாவையும் கொவிட்19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்ட அன்பளிப்புகளை பிரதமர் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளித்தார்.

நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நிவ் சவுத் வேல்ஸில் உள்ள பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கம் நேரடியாக வைப்புச் செய்துள்ள 1.5மில்லியன் ரூபாவையும் சேர்த்து கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி வைப்பு தற்போது 891 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 07.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.